**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 10.12.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 25 (LW21)

2025 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ் | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

( A2, A3, A7 ஆஜர். A1, A4 to A6 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது மதுரை சங்கர் IAS Academy யில் TNPSC Group–I தேர்விற்கு படித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன கருப்பையாவை எனக்குத் தெரியும். அவரது மனைவி வளர்மதியை எனக்குத் தெரியும். சாட்சி காளீஸ்வரியை எனக்குத் தெரியும். சாட்சி பிரபுபாண்டியை எனக்குத் தெரியாது. இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள ஆஜர் எதிரிகள் எங்கள் ஊர் வழியாக போவார்கள். அப்போது பார்த்துள்ளேன். ஆனால் யார் யார், என்ன பெயர் என்று எனக்குத் தெரியாது. ஆஜர் ஆகாத ரமேஷ்குமார், ராஜ்குமார், கார்த்திகைசாமி,



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.12.10 17:37:34 +0530

சரத்குமார், ரஞ்சித் ஆகியோரை தெரியாது.

நான் 2023ம் ஆண்டு திண்டுக்கல் Sanitary Inspector வேலைக்காக படித்துக்கொண்டு இருந்தேன். அப்போது, எங்கள் ஊரை சேர்ந்த கருப்பையா இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். என் அம்மா அப்பா இந்த தகவலை என்னிடம் சொன்னார்கள். கருப்பையா எவ்வாறு இறந்தார் என்று எனக்குத் தெரியாது. இது சம்மந்தமாக நான் எதுவும் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. நான் யார் மீதும் என்னை மிரட்டியதாக புகார் கொடுக்கவில்லை. ஆனால் என் பெயரை பயன்படுத்தி புகார் கொடுத்துள்ளார்கள். அதற்காக என்னை காவல் நிலையத்தில் அடிக்கடி அழைத்து விசாரித்தார்கள். எங்கள் ஊரை சேர்ந்த முத்துராஜ் என்பவர் நான், ஸ்டாலின், மூர்த்தி ஆகியோர் சேர்ந்து சென்றபோது ரமேஷ்குமார், பசுபதி பாண்டியன், தமிழ்செல்வன், வினோத்பாண்டியன் என்ற வினோத்குமார் ஆகியோர் மிரட்டியதாக போலிசாரிடம் புகார் கொடுத்தாரா என்றால் எனக்குத் தெரியாது. ஆனால் அது போன்று என்னை யாரும் மிரட்டவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அப்போது நான் எங்கள் ஊரை சேர்ந்த காளீஸ்வரி என்பவரை 1வது எதிரி ரமேஷ்குமார் போன் மூலம் தொடர்பு கொண்டு, அவரிடம் தவறாக நடந்து கொண்டதாகவும், அதனால் காளீஸ்வரி ஊர்க்காரர்களிடம் புகார் செய்து, மேற்படி ரமேஷ்குமாரை பிடிப்பதற்காக, அவரை குறிப்பிட்ட இடத்திற்கு வரசொல்லி அங்கு அனைவரும சென்று, ரமேஷ்குமாரை பிடித்து தாக்கினார்கள் என்றும், அந்த முன்விரோதத்தின் அடிப்படையில் எதிரிகள் நாங்கள் போகும் போதும்,



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.12.10 17:37:38 +0530

வரும்போதும் எங்கள் ஊரை சேர்ந்தவர்களுடன் தகராறு செய்துவந்தார்கள் என்றும், அதுபோல் 14.06.2021ம் தேதி மாலை சுமார் 04.00 மணிக்கு முத்துராஜ், நான், ஸ்டானின், மூர்த்தி ஆகியோர் சென்ற போது, ரமேஷ்குமார், பசுபதிபாண்டியன், தமிழ்செல்வன், வினோத்பாண்டியன் என்ற வினோத்குமார் ஆகியோர் எங்களை வழிமறித்து அடித்தார்கள் என்றும், அதற்காக முத்துராஜ் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் அதன் அடிப்படையில் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த முன்விரோத்தின் அடிப்படையில் எங்கள் ஊரை சேர்ந்த கருப்பையாவை ரமேஷ்குமாரும் அவரை சேர்ந்த எதிரிகளும் வழிமறித்து அடித்து கொலை செய்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்டேன் என போலிசாரிடம் சொல்லிவிட்டு தற்போது அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.12.10 17:37:41 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .